**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 551/2025**
**வழக்கு சாட்சி PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சஜீவ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுதாகரன் | தொழில் | : | உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | மானூர் | வயது | : | 41 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 19.05.2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது மானூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் சிவகிரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 01.02.2023ம் தேதி, அதிகாலை 01.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, நிலைய பாரா காவலர் வெங்கடேஷ் என்பவர் கொடுத்த தனிஅறிக்கையை பெற்று அதன் தன்மைக்கேற்ப காவல் நிலைய குற்றஎண்.30/2023, சட்டப்பிரிவுகள் 294(பி), 353, 307, 506(2) IPC ன் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை சிவகிரி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.1 ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.05.22 16:33:06 +0530

**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 551/2025</u>**

**<u>வழக்கு சாட்சி PW-2</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெங்கடேஷ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | அருணாச்சலம் | தொழில் | : | தலைமைக்காவலர் |
| கிராமம் | : | செந்தட்டியாபுரம் | வயது | : | 37 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 19.05.2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது திருவேங்கடம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2020ம் வருடம் சிவகிரி காவல் நிலையத்தில் இரண்டாம்நிலை காவலராக பணியில் இருந்தபோது, 31.01.2023 ம் தேதி, காலை 08.00 மணிக்கு நிலைய பாராவாக நியமிக்கப்பட்டிருந்தேன். அன்று இரவு சுமார் 21.15 மணிக்கு கொத்தாலப்பட்டியை சேர்ந்த கணேசன் மகன் அய்யனார் காவல்நிலையத்திற்கு வந்து தலைமைக்காவலர் ராமராஜ் என்பவரிடம் ஏற்கனவே எதிரியின் வாகனத்தை பிடித்து வைத்திருந்ததினால் எதிரி குடிபோதையில் வந்து வாகனத்தை கேட்டு பிரச்சனை செய்துள்ளார். வாகனத்தை நீதிமன்ற வழக்கு முடித்து எடுத்துக்கொள்ள தலைமைக்காவலர் சொல்லி அனுப்பியுள்ளார். அன்றைய தினம் 22.15 மணிக்கு யாரோ ஒருவர் செங்கல்லை கொண்டு காவல்நிலையத்தின் கதவில் எறிந்தார். அந்த சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்தேன்.

அப்போது எதிரி அய்யனார் கையில் செங்கலை வைத்துக்கொண்டு என்னை நோக்கி மறுபடியும் எறிந்தார். அருகிலுள்ள காவலர் கணேசன் என்பவரும், நானும் எதிரியை பிடிக்க முற்பட்டபோது கல்லால் எதிரி எறிந்ததினால் நாங்கள் விலகி விட்டோம். எதிரி போதையில் கெட்ட வார்த்தை பேசினார். எதிரி முதுகில் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து போலீசார் பெரிய இவனா? என்று அசிங்கமான வார்த்தைகளால் பேசினார். என்னுடைய வாகனத்தை தரவில்லை என்றால் வெட்டி கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். காளிமுத்து என்பவர் சத்தம் போட்டவுடன் அவரையும் மிரட்டி விட்டு தப்பியோடி விட்டார். சம்பவத்தை குறித்து தனிஅறிக்கை தயார் செய்து உதவி ஆய்வாளரிடம் கொடுத்தேன். தனி அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.05.22 16:33:13 +0530